# மண்ணின்றி பசுந்தீவனம் வளர்த்தல் (ஹைட்ரோபோனிக்)



4 X 3 அடி அளவு கொண்ட இக்கருவி சதுர வடிவ இரும்பு கம்பிகளால் ஆன சட்டம் மற்றும் பச்சை நிற துணியால் (90% shade net) வடிவமைக்கப்பட்டுள்ளது. பசுமைக் குடிலுக்குள் உருவாகும் தேவையற்ற வாயுக்களை வெளியேற்ற காற்றை வெளியேற்றும் கருவி (Exhaust Fan) பொருத்தப்பட்டுள்ளது. ஹைட்ரோபோனிக் பசுமை வீட்டினுள் பிளாஸ்டிக் தட்டுகள் 8 அடுக்குகளாக குறிப்பிட்ட இடைவெளியில் பொருத்தப்பட்டுள்ளது. இரண்டு வரிசையாக ஒவ்வொரு வரிசையிலும் 8 அடுக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் தட்டுகளின் இரு புறத்திலும் நீர் தெளிப்பான் பொருத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தட்டிற்கும் ஒரு நீர் தெளிப்பான் என்ற விகிதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் தட்டுகளில் நீர்தெளிப்பான் மூலம் பாய்ச்சப்படும் தண்ணீர் தேங்கா வண்ணம் பிளாஸ்டிக் தட்டின் இரு புறத்திலும் 3 முதல் 4 துவாரங்கள் உள்ளன.

## பயன்கள்

- மண்ணின்றி தீவனப்பயிர் வளர்க்கும் இக்கருவியின் மூலமாக நாளொன்றுக்கு 20 கிலோ பசுந்தீவனம் உற்பத்தி செய்ய இயலும்.
- இவ்வாறு மண்ணில்லாமல் உற்பத்தி செய்த பசுந்தீவனத்தை கறவை மாடு, எருமை, குதிரை, வெள்ளாடு, செம்மறியாடு, வெண்பன்றி மற்றும் கோழிகளுக்கு வழங்கலாம்.
- இக்கருவியானது ஒன்று / இரண்டு கறவை மாடு வைத்திருப்போர் அல்லது 10 ஆடுகள் வைத்திருக்கும் சிறு பண்ணையாளர்களுக்கு ஏற்ற உபகரணமாகும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**கால்நடைப் பண்ணை வளாகம்**
மாதவரம் பால்பண்ணை, சென்னை – 600 051.
தொலைபேசி: +91–44–2555 1571
மின்னஞ்சல் : urf@tanuvas.org.in

**விலை**

**₹ 22,500/-**
**(18% வரி இல்லாமல்)**